**தலைப்பு 311 – தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை**

---

2017 ஆம் ஆண்டு 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்ட 2016 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தில் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்டுள்ள தலைப்பு மற்றும் விடய இலக்கத்திற்கமைவாக ஒதுக்கீட்டுக் கணக்கு, கணக்கிணக்கக் கூற்று என்பன தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அந்தக் கணக்குகளிலும் கணக்கிணக்கக் கூற்றுகளிலும் வெளிப்படுத்தும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றுகை என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரை பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரதும் கணக்கீட்டு உத்தியோகத்தரதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்கீட்டு நெறிமுறை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவையில் நிதி ஒழுங்குவிதி 124 இன் பிரகாரம் அரசிறை சேர்த்தலும், அரசாங்கத்தின் பிற பணங்களைச் சேர்த்தலும் மற்றும் அரசாங்கத்தின் எல்லா நிதி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் தொடர்பான பொது கண்காணிப்பும் நிதி அமைச்சரின் பொறுப்பாகும். ஆகவே அவரால் அந்த பொறுப்பினை நிறைவேற்றும் பொருட்டு நிதி ஒழுங்குவிதிகள் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களை நியமனம் செய்யப்பட்டுள்ளது. நிதி ஒழுங்குவிதி 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத்து தலைவர் தமது திணைக்களத்தின் சகல விதமான நிதிக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோத்தராவதுடன், அரசிறைக் கணக்கீட்டு உத்தியோகத்தரை திறைசேரியால் நியமனம் செய்யப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்குள் தமது கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றப்பட்டு சமர்ப்பிக்கப்படும் கணக்கீடுகள் மற்றும் கணக்கிணக்க கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகளும், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் நிருவாக ஒழுங்குவிதிகளுக்கமைவாக பேணிச் செல்லுதல், தயாரித்தல், நியாயமான வகையில் சமர்ப்பிப்பதற்கு ஏற்புடையதான உள்ளக கட்டுப்பாடுகளை திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் மற்றும் அவற்றை பேணதலும் இந்த பொறுப்புகளுள் உள்ளடங்கும்.

## 1.3 கணக்காய்வு விடயவெல்லை

தலைப்பு 311– தேசி பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றுகை தொடர்பில் திட்டமிடல், அரச செலவினம், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வளங்களை முகாமைத்துவம் செய்தல், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளை பயன்படுத்தல், சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு ஒழுங்கமைதல், புத்தகங்கள், ஆவணங்கள், அறிக்கைகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுகளை இற்றைப்படுத்தி பேணுதல், கணக்குகளை தயாரித்து காலத்திற்கேற்றவாறு சமர்ப்பித்தல், செயலாற்றுகை சுட்டிகளை அடிப்படையாகக்கொண்டு சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் செயலாற்றுகை அறிக்கைகளை வழங்குதல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளின்கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மீளாய்விற்கான ஆண்டில் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் வழங்கப்பட்டது. கணக்கீடுகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுகள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள், கணக்காய்விற்கு சமர்ப்பித்த திட்டமிடல், கணக்கீடுகள், கணக்கிணக்கக் கூற்றுகள் மற்றும் செயலாற்றுகை அறிக்கைகள் பற்றிய மீளாய்வுகள் அத்துடன் கொடுக்கல்வாங்கல்களில் மாதிரிகள் தொடர்பான உறுதிப்பாடுகள். பரிசோதனைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அந்த மீளாய்வு, பரிசோதனைகளின் விடயவெல்லை மற்றும் போதியளவு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள அலுவலக பதவியணி, ஏனைய வளங்கள், கால அவகாசம் போன்ற எல்லைகளுக்குள் இயன்றவரை விரிவான கணக்காய்வை மேற்கொள்ள முடியுமானவாறு தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்பு

2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் வெளிப்படுத்திக்கொண்ட கணக்காய்வு அவதானிப்புகள் மேற்படி 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விபரமாக காட்டப்பட்டுள்ளது. அந்த அவதானிப்புகளில் போதியளவு மற்றும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகளை, இவ்வறிக்கையில் 2.1 பந்தியிலிருந்து 2.11 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. நிதி நிருவாகத்தில் போதியளவினை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி கோவையில் 128 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை நிறைவேற்றும்போது வெளிப்படுத்திக்கொண்ட, பின்வரும் குறிப்பில் சாரம்சப்படுத்தி காட்டப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புகளுக்கமைவாக கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்கீட்டு நெறிமுறைகளை திருப்திகரமாக நிறைவேற்றியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| **நிதி ஒழுங்குவிதி 128 (1) பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்கீட்டு நெறிமுறை** | | **கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாமை** | **அவதானிப்பு உள்ளடக்கிய அறிக்கையில் பந்தி தொடர்** |
|---|---|---|---|
| **நிதி ஒழுங்குவிதி** | | | |
| 128(1)(அ) | அனுமதித்த முயற்சிகளுக்கு நிதி ஏற்பாடு அளிக்கையில் பாராளுமன்றத்துக்கு இருந்த எண்ணங்களுக்கும் அரசாங்க கொள்கைக்கும் மதிப்புக் கொடுத்து அவரின் திணைக்கள வேலைகள் திட்டமிடப்பட்டு உரிய | 1. செயற்றிட்டம் சரியாக தயாரிக்கப்படாமை.<br>2. செயற்றிட்டத்தின் பணிகளை நிறைவேற்றப்படாமை<br>3. பெறுகை நடவடிக்கைகளை போதுமானவாறு | 2.1.1<br>2.1.2<br>2.3.1<br>2.3.2 |

| | | | |
|---|---|---|---|
| | காலத்தில் நிறைவேற்றப்படுகின்றன எனவும், அவ்வாண்டுக்கென விதிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கும் அல்லது குறிப்பிட்டுள்ள இலக்கை எய்துவதற்கும் அல்லது இவ்விரண்டிற்கும் முயற்சி செய்திருத்தல் | திட்டமிடப்படாமை | |
| | | 4. பெறுகை செயன்முறையினை நடைமுறைப்படுத்துவதில் காணப்படும் குறைப்பாடுகள் | 2.6 |
| | | 5. ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளின் பயன்பாட்டிலுள்ள குறைப்பாடுகள் | 2.10 |
| | | 6. ஆவணப் பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை. | |
| 128(1)(ஈ) | பெறுகை, கொடுப்பனவு அத்துடன் மற்றும் விடயங்கள் பற்றி போதிய உள்ளகக் கண்காணிப்பு பேணப்படுவதுடன், காலத்துக்குக் காலம் பரிசீலிக்கப்படுகின்றதெனவும் | ஆரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கில் காணப்பட்ட குறைப்பாடுகள் | 2.7 |
| 128(1)(உ) | அரசாங்கத்துக்குச் சொந்தமான அல்லது அதன் கட்டுக்காப்பிலுள்ள பணம், பண்டங்கள், சாதனங்கள் பிற சொத்துக்கள் ஆகியவற்றைப் பாதுகாத்துப் பேணுவதற்கு போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றனவெனவும், இவை காலத்துக்குக் காலம் சரிபார்க்கப்படுகின்றவெனவும், இவை தீர்வு செய்யப்படும்போது அத்தகைய தீர்வு செய்தல் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்கவுள்ளனவெனவும் | சொத்துக்கள் முகாமைத்துவத்தில் காணப்பட்ட குறைப்பாடுகள் | 2.3 |
| 128(1)(ஊ) | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் அல்லது திறைசேரியால் கேட்கப்படும் அத்தகைய தகவல், கூற்றுகள், விவர அறிக்கைகள் ஆகியன சரியாகவும், உடனடியாகவும் கொடுக்கப்படுகின்றனவெனவும் . | வருடாந்த செயலாற்றுகை தயாரிக்கப்படாமை | 2.1.3 |

## 2. போதியளவிலானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 2.1 செயலாற்றுகை

#### 2.1.1 திட்டமிடல்

2014 ஆம் ஆண்டு பெப்ருவரி 17 அந் திகதிய 01∴2014 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை பிரகாரம் 2017 ஆம் ஆண்டுக்கான செயற்றிட்டம் தயாரிக்கப்படவில்லை. மீளாய்விற்கான ஆண்டில் திணைக்களத்தால் 09 பிரதான கடமைப் பொறுப்புகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்ததுடன், திணைக்களம் எதிர்பார்க்கப்பட்ட பயன்களை பெற்றுக்கொள்வதற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயற்றிட்டம் தொடர்பாக பின்வரும் குறைப்பாடுகள் காணப்பட்டன.

(அ) மீளாய்விற்கான ஆண்டுக்கு இற்றைப்படுத்திய நிறுவனத்தின் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் தற்போது சேவையிலுள்ள பதவியணி தொடர்பான விபரங்கள் செயற்றிட்டத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) மீளாய்விற்கான ஆண்டில் திறைசேரியிடமிருந்து இத் திணைக்களத்திடம் கிடைக்கப்பெற்றிருந்த ஒதுக்கீடுகளுக்கு மேலதிகமாக ஏனைய நிறுவனங்களிடமிருந்து 'மெத் சித் அருண நிகழ்ச்சித்திட்டம்'' கீழ் பல்வேறு கருத்திட்டங்களின் பொருட்டு ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெற்றிருப்பினம் திணைக்களத்தின் செயற்றிட்டத்தில் அப் பணிகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வருடாந்த வரவு செலவு, செயற்பாட்டு காலவெல்லை சட்டகம் மற்றும் எதிர் பார்க்கப்படும் விளைவளவு என்பவற்றின்படி முதன்மை அடிப்படையில் தயாரிக்கப்பட்ட செயற்றிட்டம் வருடாந்த செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வருடாந்த செயற்பாடுகளின் பொருட்டு கட்டுநிதி தேவைகளின் திட்டம், பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் பொருட்டு பெறுகை திட்டம் மற்றும் உள்ளக கணக்காய்வு திட்டம் செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

#### கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றப்படாமை

#### நடைமுறை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றப்படாமை

வருடாந்த செயற்றிட்டம்படி திணைக்களத்தால் 09 கடமைப் பொறுப்புகள் நிறைவேற்றப்பட வேண்டியிருப்பினும், அதில் 4 கடமைப் பொறுப்புகளை மட்டும் நிறைவேற்றப்பட்டிருந்தன. அவ்வாறு நிறைவேற்றப்படாத 05 கடமைப்பொறுப்புகளின் மொத்தம் 196.4 மில்லியன் ரூபாவிலான ஒதுக்கீடுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

செயற்றிட்டம்படி லோலுகஸ்வெவ நகர அபிவிருத்தி கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றி அநுராதபுரத்தின் நகர அபிவிருத்தியை மேற்கொள்வதற்கு எதிர் பார்க்கப்படினும், அனுமதி பெற்றுக்கொள்வதில் தாமதங்கள், சாத்திய வளக் கூற்று அறிக்கைகளை பெற்றுக்கொள்வதில் தாமதங்கள் மற்றும் பெறுகைகளை திட்டமிட்டவாறு நிறைவேற்றுவதற்கு முடியாது போதல் என்பன காணரமாக குறித்த பயன்களை கையேற்பதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

#### 2.1.3. வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2002 ஆம் ஆண்டு செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை பிரகாரம், திணைக்களத்தால் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்கள் மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்படையதாக செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், அவ்வறிக்கை 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 அந் திகதியிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2.2 உள்நாட்டு நிதியங்கள் பயன்படுத்திய கருத்திட்டங்கள்

### 2.2.1 பெறுகை திட்டமிடல் மற்றும் ஆரம்ப கட்டம்

அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல் கோவையில் 4.2.1 வழிகாட்டல்படி எதிர்வரும் ஆண்டுக்கு ஏற்படையதான விரிவான பெறுகை திட்டம் மற்றும் பிரதான பெறுகை திட்டம் தயாரித்து அங்கீகரித்துக்கொள்ளப்படவில்லை.

### 2.2.2 பெறுகை நடைமுறையினை செயற்படுத்தல்

**இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(i) வருடாந்த வரவு செலவு திட்டத்தில் இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் பொருட்டு 01 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பினும், பெறுகை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் 2017 ஆம் ஆண்டு பெப்ருவரி 28 அந் திகதி இறுதியாகும்போது முடிவுறுத்தப்பட வேண்டுமாயினும், அவ்வாறு முடிவுறுத்தப்படவில்லையென்பதுடன். அதற்காக பெறுகை திட்டத்தையேனும் திருத்தம் செய்யப்படவில்லை.

(iii) 2017 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் கொள்வனவு செய்திருந்த ரூபா. 624இ150 ஆன உபகரணங்களின் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட பெறுகை நடவடிக்கைகளுக்கு இரண்டு நிறுவனங்களிடமிருந்து விலை கணக்குகள் சமர்ப்பிக்கப்படினும், விலை கணக்கு திறக்கும் குழு நியமனம் செய்யப்படவில்லையென்பதுடன், விலை கணக்குகள் திறக்கும் அறிக்கைகளில் அதற்கு அதிகாரம் பெற்ற அலுவலர்களால் கையொப்பமிடப்படவில்லை.

(iv) அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.1 மற்றும் 4.4 அகிய வழிகாட்டல்களின் படி பெறுகை திட்டத்தை ஒழுங்குபடுத்தல் மற்றும் இற்றைப்படுத்தாமை காரணமாக பெறுகை திட்டம்படி அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக 2.00 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்திருப்பினும், அந்த ஒதுக்கீடுகளை விஞ்சி 6.257 மில்லியன் ரூபா வரை அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(v) பெறுகை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த 197.5 மில்லியன் ரூபாவிலான 06 வேலைகள்.்.பொருட்கள் மீளாய்விற்கான ஆண்டில் நிறைவேற்றப்படவில்லை.

(vi) பெறுகை திட்டத்தில் உள்ளடக்கப்படாத ரூபா.1இ210இ403 ஆன 04 கடமைகள் மீளாய்விற்கான ஆண்டில் நிறைவேற்றப்பட்டிருந்தன.

(vii) மோட்டார் வண்டியொன்றை பழுதுபார்ப்பதற்காக பல சந்தர்ப்பங்களில் விலை கேள்விகள் கோரியிருப்பினும், அந்த விலைக் கேள்விகளை நீக்கப்பட்டு, மீண்டும் மீண்டும் விலை கேள்விகள் கோரப்படுவதன்மூலம் பெறுகை நடைமுறை உரியவாறு இடம் பெறாமை காரணமாக திணைக்களத்திற்கு ரூபா.53இ620 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது.

(viii) அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல் கோவையில் 2.11.3 வழிகாட்டல் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டக் குழுவால் விலை கேள்வி மதிப்பிடல் சாராம்ச அறிக்கை தயாரித்திருக்கவில்லை.

## 2.3 சொத்துக்களின் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொண்ட மாதிரி கணக்காய்வு பரிசோதனையில் பின்வரும் குறைப்பாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ)** சொத்துக்களை அட்டவணைப்படுத்தல்

2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆந் திகதிய 01/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை பிரகாரம் நிதி மற்றும் வெகுசன ஊடாக அமைச்சின் கீழ் இயங்கும் கொம்ப்ட்ரோலர் நாயக அலுவலகத்திடம் அனுப்பி வைத்திருந்த சொத்துக்கள் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள சொத்துக்களின் பெறுமதி மற்றும் ஒதுக்கீட்டுக் கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ள நடைமுறையல்லாத சொத்துக்களின் அசைவு தொடர்பான அறிக்கையில் பெறுமதி ரூபா. 72,357,395 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**(ஆ) செயலற்ற மற்றும் குறைப் பயன்பாட்டு சொத்துக்கள்**

பெறுமதி ரூபா 6,330,000 ஆன 05 மோட்டார் வாகனங்கள் 06 மாதங்கள் தொடக்கம் 12 மாதங்கள் வரையிலான காலப்பகுதியும், ரூபா..7,965,000 ஆன 03 கட்டிடங்கள் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 06 அந் திகதி வரை செயலற்ற நிலையில் காணப்பட்டது.

**(இ) வருடாநத் பொருட் மீளாய்வினை நடாத்தல்**

2017 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக அய்வு சபை அறிக்கைகளில் சுட்டிக் காட்டப்பட்டிருந்த மிகை, குறைப்பாடுகள் மற்றும் மேற்கொண்ட ஏனைய பரிந்துரைகள் தொடர்பில் 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

## 2.4 சேதங்கள் மற்றும் நட்டங்கள்

திணைக்களத்திற்குரிய 57-9387 ஆம் இலக்க வாகனம் காப்புறுதி செய்திருக்கவில்லையென்பதுடன், 2014 ஆம் ஆண்டு பெப்ருவரி 26 ஆந் திகதி விபத்துக்குள்ளாகியிருந்தது. விபத்தின் பின்னர் அலுவலக வலாகத்தில் நிறுத்தி வைத்திருக்கும்போது மேற்படி வாகனத்தின் லைட் தொகுதி, கெசட் இயந்திரம் மற்றும் சாரதி ஆசனங்கள் களவாடப்பட்டிருந்ததுடன். இது தொடர்பில் திணைக்களத்தால் முறையான நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

## 2.5 கணக்காய்விற்கு சாட்சியளிக்காமை

மொத்தம் ரூபா.385,569 ஆன செலுத்தல் வவுச்சர்களின் பொருட்டு இரசீதுகள் கணக்காய்விடம் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2.6 கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளை பயன்படுத்தாமை

2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் 05 ஆண்டு காலப்பகுதிக்குள் திணைக்களம் ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடு, உபயோகம் மற்றும் மிகுதி தொடர்பான தகவல்களும் அதனுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகளும் பின்வருமாறாகும்.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஒதுக்கீடு | உபயோகம் | மீதி | மீதி தேறிய ஒதுக்கீட்டில் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| -------- | -------------- | --------------- | -------------- | -------- | ------------------- |
| | | **ரூபா.மில்லியன்** | **ரூபா.மில்லியன்** | **ரூபா.மில்லியன்** | |
| 2013 | மீண்டுவருஞ் | 145.1 | 140.5 | 4.6 | 3.2 |
| | மூலதன | 11.8 | 11.7 | 0.1 | 0.8 |
| | **மொத்தம்** | **156.9** | **152.2** | **4.7** | **3.0** |
| 2014 | மீண்டுவருஞ் | 153.3 | 150.6 | 2.7 | 1.8 |
| | மூலதன | 9.7 | 7.4 | 2.3 | 23.7 |
| | **மொத்தம்** | **163.0** | **158.0** | **5.0** | **3.1** |
| 2015 | மீண்டுவருஞ் | 179.2 | 169.0 | 10.2 | 5.7 |
| | மூலதன | 13.0 | 7.6 | 5.4 | 41.5 |
| | **மொத்தம்** | **192.2** | **176.6** | **15.6** | **8.1** |
| 2016 | மீண்டுவருஞ் | 182.7 | 175.9 | 6.8 | 3.7 |
| | மூலதன | 109.1 | 8.4 | 100.7 | 92.3 |
| | **மொத்தம்** | **291.8** | **184.3** | **107.5** | **36.8** |
| 2017 | மீண்டுவருஞ் | 181.0 | 174.4 | 6.6 | 3.6 |
| | மூலதன | 211.4 | 16.0 | 195.4 | 92.4 |
| | **மொத்தம்** | **392.4** | **190.4** | **202.0** | **51.5** |

மீளாய்விற்கான ஆண்டு தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளை பயன்படுத்தாமை**

---------------------------------------------------------------------------

03 செலவு விடயங்களின் பொருட்டு ஏற்பாடு செய்திருந்த ரூபா. 191இ900 ஆன மொத்த தேறிய ஒதுக்கீடுகளை பயன்படுத்தாது மொத்தமாக மிகுதியாக்கப்பட்டிருந்தது.

**(ஆ) மிகை ஒதுக்கீடுகளை ஏற்பாடு செய்திருத்தல்**

-------------------------------------------------------------

07 செலவு விடயங்களின் பொருட்டு மொத்தம் 196.94 மில்லியன் ரூபாவிலான மிகை ஒதுக்கீடு ஏற்பாடு செய்திருத்தல் காரணமாக, அந்த செலவு விடயங்களுக்கு ஏற்புடையதான ஒதுக்கீடுகளில் மொத்தம் 11.28 மில்லியன் ரூபா மட்டும் உபயோகப்படுத்தியிருந்தமையால், மிகுதியானது ஏற்பாடு செய்திருந்த தேறிய ஒதுக்கீட்டில் நூற்றுக்கு 17 தொடக்கம் நூற்றுக்கு 98 வரையிலான எல்லையைக் கொண்டிருந்தது.

**(இ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கிய ஒதுக்கீடுகளின் உபயோகம்**

------------------------------------------------------------------------------------------------

பல்வேறு அலுவல்களின் பொருட்டு மாநகர, மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சினால் மொத்தம் 39இ086இ409 ரூபாவிலான ஒதுக்கீடு திணைக்களத்திடம் வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த ஒதுக்கீடுகளில் மொத்தம் 7இ839இ649 ரூபா உபயோகப்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் ரூபா.31இ246இ760 அல்லது வழங்கியிருந்த ஒதுக்கீடுகளில் நூற்றுக்கு 80 ஆன தொகை எஞ்சியிருந்தது.

**2.7** அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கு

பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

திணைக்களத்திற்கு ஏற்புடையதாக 31101 விடய இலக்கத்திற்கமைவாக அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கு பொருட்டு பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உண்மையான பெறுமதிகள் பின்வருமாறாகும்.

| செலவினம் | | கிடைக்கப் பெறுதல் | | பற்று மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக்கூடிய எல்லை | உண்மையான | ஆகக் குறைந்த எல்லை | உண்மையான | ஆகக்கூடிய எல்லை | உண்மையான |
| ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் |
| 12.00 | 11.43 | 8.00 | 8.75 | 50.00 | 34.64 |

நிலுவை மீதி அறவிடப்படாமை

கணக்காய்விடம் சமர்ப்பித்த கணக்கிணக்க கூற்று பிராகரம் அன்றயை திகதியில் அறவிட வேண்டியிருந்த நிலுவை மிகுதியின் மொத்தம், இடமாற்றம் பெற்றுச்சென்ற அலுவலர்களின் கடன் தவிர்ந்த ரூபா 574இ630 ஆனதுடன், அது 05 ஆண்டு காலவெல்லை தொடக்கம் இருந்து வருவதுடன்,, இந்த கடன் மீதி அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

2.8 கட்டுநிதி கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஆம் ஆண்டு யூலை மாதம் 14 ஆந் திகதிய 03.∴2015 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையில் திருத்தம் செய்யப்பட்ட நிதி ஒழுங்குவிதி 371(2) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக பதவிநிலையல்லாத 19 அலுவலர்களுக்கு 137 சந்தர்ப்பங்களில் மொத்தம் ரூபா.1இ227இ210 ஆன நிமித்த கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) மேற்படி சுற்றறிக்கையில் திருத்தம் செய்யப்பட்ட நிதி ஒழுங்குவிதி 371(5) இன் பிரகாரம் அலுவலை முடிவுறுத்தி 10 நாட்களுக்குள் பெற்றுக்கொள்ளப்பட்ட நிமித்த உப கட்டுநிதிகளை சீராக்கப்பட வேண்டுமாயினும், 07 சந்தர்ப்பங்களுக்கு ஏற்புடையதாக வழங்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா.111இ250 ஆன நிமித்த கட்டுநிதிக்கான அலுவல்கள் முடிவடைந்து 15 நாட்கள் தொடக்கம் 37 வரையிலான காலப்பகுதி தாமதமடைந்த பின்னர் சீராக்கப்பட்டிருந்தது.

2.9 ஆவணப் பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தால் 1978 ஆம் ஆண்டு திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை பிரகாரம், காணி மற்றும் கட்டிடங்களின் பொருட்டான நிலையான சொத்துக்களின் பதிவேடு இற்றைப்படுத்தியிருக்கவில்லையென்பதுடன், வாகனங்கள் தவிர்ந்த எனைய சொத்துக்களின் பதிவேடு பேணப்படவில்லை. அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல் கோவையில் 2.11.2 வழிகாட்டல்படி பெறுகை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களின் வருகை பதிவேடு பேணப்படவில்லை.

2.10 உள்ளக கணக்காய்வு

2017 ஆம் ஆண்டின் உள்ளக கணக்காய்வு திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த சில பணிகள் மீளாய்விற்கான ஆண்டு இறுதியிலும் நிறைவேற்றியிருக்கவில்லை.

2.11 மனித வளங்களின் முகாமைத்துவம்

அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, உண்மையான பதவியணி மற்றும் ஆளுக்குரிய வேதனாதிகளின் பொருட்டான செலவினம்

2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட, உண்மையான மற்றும் வெற்றிடப் பதவியணி தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும். மீளாய்விற்கான ஆண்டின் பொருட்டு திணைக்களத்தால் ஆளுக்குரிய வேதனாதிகளின் செலவு தொகுதி பொருட்டு 129.928 மில்லியன் ரூபா செலவிடப்பட்டிருந்தது. அதன்படி தனி நபர் செலவு ரூபா. 460இ739 அக இருந்தது.

| | பதவியணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கை | உண்யைமான பதவியணி எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேட்ட மட்டம் | 51 | 11 | 40 |
| (ii) | மூன்றாம் நிலை மட்டம் | 08 | 01 | 07 |
| (iii) | இரண்டாம் நிலை மட்டம் | 114 | 78 | 36 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 205 | 192 | 13 |
| | மொத்தம் | 378 | 282 | 96 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் 96 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை மேற்கொள்ளவில்லையென்பதுடன், 02 சிரேட்ட மட்டத்திலான பதவிகளும், 38 நிறைவேற்று மட்டத்திலான பதவிகளும் அவற்றுகள் உள்ளடங்கும்.

(ஆ) 03 உதவிப் பணிப்பாளர்களுக்கான வெற்றிடங்கள் பல ஆண்டுகள் இருந்து வந்தமை காணரமாக, அந்தப் பதவிகளில் கடமைகளை நிறைவேற்றுவதற்கு 03 அலுவலர்கள் 2015 ஆம் ஆண்டு நவம்பர் 20 ஆந் திகதி தொடக்கம் நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன், அந்த அலுவலர்கள் 2017 ஆம் அண்டு திசெம்பர் 31 ஆந் திகதியிலும் குறித்த அலுவல்களை நிறைவேற்றுவதற்கு கடமையில் ஈடுபட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) ஏனைய தரப்புகளிடம் விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்

திணைக்களத்தின் இரண்டாம் நிலை மட்டத்தில் 36 அலுவலர்களின் வெற்றிடங்கள் இருக்கையில், திணைக்களத்தால் மீளாய்விற்கான ஆண்டில் ஏனைய தரப்புகளிடம் விடுவிக்கப்பட்டிருந்த மனித வளங்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும்.

| | பதவியணி வகை | எண்ணிக்கை | விடுவிக்கப்பட்ட அமைச்சு | விடுவிக்கப்பட்ட ஆண்டு |
|---|---|---|---|---|
| (i) | அபிவிருத்தி உதவியாளர் | 01 | வீடமைப்பு மற்றும் நிருமாணிப்பு அமைச்சு | 2017 |
| (ii) | அபிவிருத்தி அலுவலர் | 03 | மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு | 2017 |
| (iii) | திட்டமிடலாளர் | 01 | மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு | 2017 |